[2nd November 1966

Madurai Milk Project

* 330 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state with reference to answer given to Question No. 278 on 4—11—1965, the work completed till date and the stage reached in the establishment of the Madurai Milk Project?

THE HON. SRI V. RAMAIAH : Construction of the Main Dairy Building at Madurai and the construction of buildings for Chilling Centres at Srivilliputtur and Virudhunagar have been practically completed except for a few minor items of work. Erection of the Plant and Machinery in the Chilling centres has been completed and that in the Main Dairy is in progress. The entire erection work is expected to be completed and the Dairy commissioned by the end of December 1966.

திரு. வை. சங்கரன் : இந்தப் பால் பண்ணையிலே ஒரு நாளைக்கு எத்தனை லிட்டர் பால் சேகரிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது? அதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்த ஸ்கிம்படி தற்போது நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பால் சேகரிக்க முடியும். ஆனால் 1,50,000 லிட்டர் வரை பிராசஸ் செய்வதற்கு வசதி இருக்கிறது.

District Gazetteers

* 331 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state whether the Government have any proposal to publish the District Gazetteers in Tamil also?

THE HON. SRI V. RAMAIAH : Yes, Sir.

12-00 noon **திரு. வை. சங்கரன் :** எந்தெந்த மாவட்டங்களில் இப்போது உடனடியாகத் தமிழில் வெளியிட உத்தேசித்திருக்கிறது ? பின்னால் அது எவ்வாறு விஸ்தரிக்கப்படும் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : ஆங்கிலத்தில் மூன்று நான்கு மாவட்டங்களில் வேலை பூர்த்தியாகி வெளி வந்தாகிவிட்டது. அதை டிரான்ஸ்லேட் செய்யவேண்டும்.

ஆரம்ப சுகாதார நிலையங்கள்

* 332 **கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் (Primary Health Centres) இல்லாத பஞ்சாயத்து யூனியன்கள் எவை, எவை ?

(இ) அவைகள் இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்படுமா ?